**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.535/2018**
**Defense Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சின்னச்சாமி | **Caste** | : | |
| **Father's Name** | : | ஈஸ்வரன் | **Calling** | : | விவசாயம் |
| **Village** | : | கேத்தனூர் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 59 |
| | | | **Dated** | : | 11.07.2025 |

**11.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**புகார்தாரர் ஆஜர் .**

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரர் எனக்கு தெரியும். இவ்வழக்கின் விவரத்தை தெரிந்து கொண்டேன்.இவ்வழக்கு என் மீது பொய்யாக தொடுக்கப்பட்ட வழக்காகும். என்னுடைய விவசாய பூமிக்கும், புகார்தாரர் பணிபுரிந்த பனியன் கம்பெனி எனது நிலத்தின் பக்கத்தில் இருந்தது. அப்போது எனக்கும் புகார்தாரருக்கும் பழக்கம் ஏற்பட்டது. பின்பு புகார்தாரரும் நானும் சேர்ந்து கம்பெனி ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் என்று என்னிடம் புகார்தாரர் சொன்னார். அதற்கு பின்னால் நாங்கள் இருவரும் பேசி கம்பெனி ஆரம்பிக்கலாம் என்று முயற்சி செய்தோம். அதற்கு பின்னால் இருவரும் சமமாக பங்கு முதலீடு செய்து கம்பெனி ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்தோம்.

2.அந்த கம்பெனி ஆரம்பிப்பதற்காக கட்டிடம் வேண்டும் என்று புகார்தாரர் கேட்டார். அதற்காக நான் எனது நிலத்தில் wind mill வாடகைக்கு விட்டதை காலி செய்ய சொல்லி அதில் கட்டிட வேலை ஆரம்பித்தோம்.அதற்கு சுமார்

3 1/2 கோடி அளவில் செலவிட்டோம். அந்த செலவு முழுவதும் நான் தான் செலவிட்டேன்.அதற்கு மாதம் மாதம் அந்த கம்பெனி நடத்துவதற்கு வாடகையாக ஒரு தொகையை எடுத்துக்கொள்ளலாம் என்று ஒப்புக்கொண்டோம். 25.07.2017 ம் ஆண்டு நாங்கள் இருவரும் Partnership செய்து கொண்டோம். (அது ஏற்கனவே எதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)

3.அந்த கம்பெனி ஆரம்பிப்பதற்கான Machine களை அவர்களுக்கு தெரிந்த இடங்களில் Order செய்தோம். எனக்கு தொழில் சம்மந்தமாக தெரியாத காரணத்தினால் புகார்தாரர் சொன்னதை நான் நம்பினேன். ஆனால் அந்த Machine களிலிருந்து எதிர்பார்த்த Production மற்றும் Quality வரவில்லை. ஒரு மூன்று மாத காலம் அப்படியே கம்பெனியை நடத்தி விட்டோம். பின்பு அவருடைய பங்கை கொடுக்கவில்லை. நான் வேறோரு கம்பெனியை நடத்தி வந்ததால் அதிலிருந்து வரும் தொகையை இந்த கம்பெனியில் பணிபுரியும் நபருக்கு சம்பளமாக கொடுத்தேன்.ஒரு கட்டத்தில் என்னால் சம்பளம் கொடுக்க இயலவில்லை. நான் இது சம்மந்தமாக புகார்தாரரிடம் கேட்டேன். அவர் என்னிடம் பணம் கொடுக்க முடியாத சூழல் இருப்பதாக சொன்னார். பின்பு உங்களால் என்ன முடியும் வேறு யாரையாவது வைத்து கம்பெனியை நடத்துங்கள் என்று கூறினார்.

4.அதன் பின்பு 16.03.2018ந் தேதி என்னுடைய மனைவி புகார்தாரருக்கு பதிலாக Partner ஆக இருக்கும் படியாக partner ship செய்து கொண்டோம். (அது ஏற்கனவே எதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).அதன் பின்பு 17.03.2018ந் தேதி என்னிடம் வந்து நான் கம்பெனியில் இருந்து வெளியேறி கொள்கிறேன், எனக்கும் இந்த கம்பெனிக்கும் வரவு செலவு இல்லை என்று Partnership retirement deed செய்து கொண்டோம்( அது ஏற்கனவே எதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). அதன் பின்பு நான் கம்பெனியை 2 மாத காலமாக நடத்தி வந்தேன். பின்பு என்னால் கம்பெனியை தொடர்ந்து நடத்த இயலவில்லை.

5.பின்பு நான் எனது கம்பெனியில் உள்ள Machine களை விற்பதற்காக வெளியில் இருந்த நபரை அழைத்து வந்தேன். அவர்கள் அந்த Machine களுக்கு Quality இல்லையென்றும் அதன் மதிப்பை விட 80 % மதிப்பை கூட்டி கொடுத்துள்ளார்கள் என்று சொன்னார்கள். அதனால் புகார்தாரரிடம் போனில் இதைப்பற்றி கேட்டேன். அதற்கு புகார்தாரர் எனக்கு

சம்மந்தமில்லை என்று சொன்னார். 24.05.2018 தேதியன்று புகார்தாரரிடம் இருந்து ஒரு கடிதம் வந்ததது. அதில் புகார்தாரருக்கு 22 1/2 லட்சம் பணம் புகார்தாரருக்கு நான் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. அந்த கடிதத்தில் புகார்தாரர் " தற்கொலை செய்து கொள்வேன் என்று என்னை மிரட்டி கடிதம் எழுதியுள்ளார்". பின்பு நான் எனது வழக்கறிஞர் மூலம் 09.06.2018 மூலம் எனக்கு ரூபாய் 25 லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு நான் புகார்தாரருக்கு அனுப்பினேன்.( அது எதசாஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது) .பின்பு பதில் அறிவிப்பு எதும் வரவில்லை.

6.கம்பெனியில் வரவு செலவு கணக்குகளை புகார்தாரர் வெளியேறும் வரைக்கும் அவர் தான் பார்த்தார். அதனால் நிர்வாகத்தில் நான் என்ன நடக்கிறது என்று இடையூறு செய்யவில்லை. நான் புகார்தாரர் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்ததால் நான் அதை பார்க்கவில்லை. என்னுடைய சிட்டி யூனியன் வங்கியின் சேமிப்பு கணக்கு புத்தகம் மற்றும் காசோலை புத்தகம் மற்றும் கம்பெனியின் காசோலை புத்தகம் கம்பெனியில் தான் இருந்தது. புகார்தாரர் எனது எனது காசோலை புத்தகத்தை எடுத்து அதை பயன்படுத்தி 5 லட்சம் ரூபாய் எடுத்துக்கொண்டார். அதன் பின்பு புகார்தாரரை கம்பெனிக்கு அழைத்து கேட்ட போது புகார்கொடுக்க போகிறேன் என்று சொன்ன போது அதற்கு அவர் என்னுடைய கஷ்டத்திற்காக பணத்தை எடுத்து விட்டேன். மன்னித்து விடுங்கள் , அடுத்த Step எதும் எடுக்க வேண்டாம் நான் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்த பணத்தை கொடுத்து விடுவதாக என்று என்னிடம் சொன்னார். அதன் பின்பு அவரிடம் இதைத்தவிர வேறு எதாவது இதே போல் செய்தீர்களா என்று கேட்ட போது என்னிடம் இருந்த 2 காசோலைகளை கிழித்து போட்டு விட்டேன், இது போல் தவறு நடக்காது என்னை மன்னித்து விடுங்கள் என்று கம்பெனியில் சொன்னார்.

7.அதன் பின்பு என்னுடைய தரத்தை குறைத்து கொள்வதற்கு விருப்பமில்லாததால் காவல் நிலையம் சென்று புகார் எதும் கொடுக்கவில்லை. அதன் பின்பு புகார்தாரர் கொடுத்த வழக்கிற்கு நீதிமன்றத்திலிருந்து ஆஜராவதற்காக அழைப்பாணை வந்தது. நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணைக்கு முன் புகார்தாரர் வழக்கறிஞரிடமிருந்து எந்த விதமான அறிவிப்பும் வரவில்லை.அதன் பின்பு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணை வந்த பிறகு தான்

வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும். அதனால் புகார்தாரர் என்னை பழிவாங்கும் நோக்கத்தோடு, என்னிடம் பணம் பறிப்பதற்காக தான் இவ்வழக்கை புகார்தாரர் தொடுத்துள்ளார். இவ்வழக்கில் எத்தனை காசோலைகளை தாக்கல் செய்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் மதசாஆ.1 ஆன காசோலை மட்டும் என்னுடையது. அதிலுள்ள கையொப்பம் , கையெழுத்து என்னுடையது அல்ல. அதனால் இவ்வழக்கு பொய்யாக என் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கு. அதனால் நான் 10 லட்சம் புகார்தாரர் கொடுக்க வேண்டியதில்லை. அது பொய்யாக என் மீது தொடுக்கப்பட்ட வழக்கு. அதனால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய வழக்கு.

**(புகார்தாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.07.11 20:07:30 +0530

Judicial Magistrate No.II
Dindigul.